From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C. .No. 204/2021

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : Vasanthkumar | Father/Husband Name | : Pandidurai |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 03.09.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் மேலூரில் வசித்து வருகிறேன். காய்கறி கடை நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 03.09.21ம் தேதி இரவு 08.30 மணியளவில் மில்கேட் ரோட்டில் வைத்து சார்பு ஆய்வாளர் பாலக்கிருஷ்ணன் அவர்கள் என்னையும் என் தம்பி அருண்குமாரையும் அழைத்து விசாரித்தார். சம்பவ இடத்தை படம் வரைந்து விசாரித்து சாட்சியாக கையெழுத்து கேட்டதன்பேரில் நானும் என் தம்பி அருண்குமாரும் கையெழத்து செய்தோம். **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**:

நான் மேலூரிருந்து தெற்குப்பட்டி செல்லும்போது போலீசார் என்னை அழைத்து விசாரித்தனர். போலீசார் விசாரணையில் நான் தெற்குப்பட்டியிலிருந்து மேலூர் சென்றுகொண்டிருந்தபோது என்னை அழைத்து விசாரித்தார் என்று சொல்லியிருந்தால் அது பொய் என்றால் சரிதான். போலீசார் என்னை அழைத்து விசாரித்ததாக சொல்லப்படும்போது இரவு மணி 08.30 என்றாலும் அந்த நேரத்தில் அந்த பகுதி இருட்டாகத்தான் காணப்பட்டது என்றாலும் சரிதான். போலீசார் படம் வரைந்து என்னிடம் பெயர் ஊரை கேட்டுக்கொண்டு கையெழுத்து பெற்று அனுப்பிவிட்டார் என்றாலும் அதை தவிர வேறு எதுவும் விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான். நான் வெள்ளைதாளில்தான் கையொப்பமிட்டேன் என்றால் சரியல்ல, அதில் வரைபடம் வரைந்திருந்தது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C. .No. 204/2021

Deposition of witness for: PW - 8

| | | | |
|---|---|---|---|
| Name | : Arunkumar | Father/Husband Name | : Pandidurai |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 03.09.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் மேலூரில் வசித்து வருகிறேன். கோயம்புத்தூர் பனியன் கம்பெணியில் வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 03.09.21ம் தேதி இரவு 08.30 மணியளவில் அனிதா கலப்பை கம்பெணி மற்றும் பழனி கண்மாய் அருகே வைத்து சார்பு ஆய்வாளர் பாலக்கிருஷ்ணன் அவர்கள் என்னையும் என் அண்ணன் வசந்த்குமாரையும் அழைத்து விசாரித்தார். சம்பவ இடத்தை படம் வரைந்து விசாரித்து எழுதி சாட்சியாக கையெழுத்து கேட்டதன்பேரில் நானும் என் அண்ணன் வசந்தகுமாரும் கையெழத்து செய்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை:**

நான் மேலூரிருந்து தெற்குப்பட்டி செல்லும்போது போலீசார் என்னை அழைத்து விசாரித்தனர். போலீசார் விசாரணையில் நான் தெற்குப்பட்டியிலிருந்து மேலூர் சென்றுகொண்டிருந்தபோது என்னை அழைத்து விசாரித்தார் என்று சொல்லியிருந்தால் அது பொய் என்றால் சரிதான். போலீசார் படம் வரைந்து என்னிடம் பெயர் ஊரை கேட்டுக்கொண்டு கையெழுத்து பெற்று அனுப்பிவிட்டார் என்றாலும் அதை தவிர வேறு எதுவும் விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான். போலீசார் என்னை அழைத்து விசாரித்ததாக சொல்லப்படும்போது இரவு மணி 08.30 என்றாலும் அந்த நேரத்தில் அந்த பகுதி இருட்டாகத்தான் காணப்பட்டது என்றாலும் சரிதான். போலீசார் என்னை விசாரித்தபோது கையில் டார்ச் லைட் வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். நான் படம் வரைந்த தாளில் மட்டும்தான் கையொப்பமிட்டேன் என்றால் சரியல்ல. ஒரு வெள்ளை தாளில் எழுதப்பட்டிருந்தது அதிலும் கையொப்பமிட்டேன். அதில் என்ன எழுதியிருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. போலீசார் என்னை அக்கம்பக்கத்தில் என்னென்ன உள்ளது என்று விசாரித்து நான் கூறியதன்பேரில் அவர்கள் எழுதியிருந்ததை எனக்கு படித்துகாண்பித்து நான் கையெழத்து செய்தேன். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.